எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றைத் தெரிவித்தல் எனது பொறுப்பாகும்.இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைவாக எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க விதித் தேவைப்பாடுகளுடன் நான் அமைவுறுவதையும்நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக் கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளும் வகையில் நடைமுறைகள் அமுல்படுத்தப்படுவதனை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படச்

சாத்தியமான பொருண்மையான பிறழ் கூற்றுக்களின் இடர் மதிப்பீடுகளை உள்ளடக்கியதாக கணக்காய்வாளரின் தீர்ப்பின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் அமைந்திருந்தன. அவ் இடர்களை மதிப்பிடுகையில் சந்தர்ப்பத்திற்கேற்ற பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதற்கு ஏற்றவாறு பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கும் நியாயமானதாக சமர்ப்பிப்பதற்கும் தேவைப்படும் உள்ளகக் கட்டுப்பாடுகள் கணக்காய்வாளரினால் கருத்திற்கொள்ளப்பட்ட போதிலும் நிறுவனத்தினது உள்ளகக் கட்டுப்பாட்டின் விளைவுதிறன் மீது அபிப்பிராயமொன்றைத் தெரிவித்தல் அதன் அர்த்தமாக இருக்கவில்லை. முகாமைத்துவத்தினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தப்பாடு மற்றும் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்துவத்தினை மதிப்பாய்தல் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தல்களின் மதிப்பீடு போன்றவற்றினைக் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றை வழங்குவதற்குபோதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைநான் பெற்றுக் கொண்டுள்ளேன்என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

----------------------------------------------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

## 2. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

-----------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து 2011 திசெம்பர் 31 இல் உள்ளபடி களனிப் பல்கலைக்கழகத்தின் நிதி நிலைமையினையும்அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றலினையும்காசுப்பாய்ச்சலினையும்இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

------------------------------------------------------------------

### 2.2.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

-----------------------------------------------------------

கணக்காய்வு தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்பட்ட மொத்தமான ரூபா 214,369,787 கணக்கீட்டுக் குறைபாடுகளை காண்பிக்கின்ற வரைபு அறிக்கையொன்று 2012 மே 10 ஆந் திகதி பல்கலைக்கழகத்தின் உபவேந்தருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதில் ரூபா 203,765,950 ஆன கணக்கீட்டுக் குறைபாடுகள் திருத்தப்பட்டு திருத்திய நிதிக் கூற்றுக்கள் 2012 மே 30 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

### 2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

-------------------------------------------

மீளளிக்கத் தேவையற்ற நூலக வைப்புக்கள் ரூபா 10,603,837 இனை வருமானமாக கணக்கீடு செய்யாது மீளளிக்கப்பட வேண்டிய வைப்புக்களாக காட்டப்பட்டிருந்தன.

### 2.2.3 செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

---------------------------------------------------------------

செலுத்தப்பட வேண்டிய 2 கணக்குகளின் ரூபா 333,187 வரவு மீதி தொடர்பில் விளக்கமளிப்புகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் செலுத்தப்பட வேண்டிய 10 கணக்குகளின் ரூபா 6,582,289 ஆன 01 தொடக்கம் 06 ஆண்டுகள் வரை பழமைவாய்ந்த செலவு மீதியினை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. பல்கலைக்கழக உப வேந்தரின் பதிலின் படி சரியான தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான கோவைகளைத் தயாரித்தல் சிரமமாக உள்ளது என்றும், 2012 ஆம் ஆண்டில் கணக்குகளைச் சமர்ப்பிக்கையில் சரியான தகவல்களைச் சமர்ப்பிப்பதற்கு தொடர்புடைய உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

### 2.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும்இணங்கி ஒழுகாமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு | இனங்கி ஒழுகாமை |
|---|---|

| | |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் xix(5) ஆம் அத்தியாயம் | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையில் காணப்படுகின்ற ஏற்பாடுகளின் பிரகாரம் உத்தியோகபூர்வ வதிவிடங்களிற்கான வாடகைகள் தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படாது வதிவிடக் குழுவினால் வாடகைகள் தீர்மானிக்கப்பட்டிருந்தன. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நி.பி. 104(3)(4) | விபத்து ஒன்று நிகழுமிடத்து தேவையான விசாரணைகளை மேற்கொண்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்க வேண்டிய போதிலும் விபத்தில் சிக்கிய முற்சக்கர வண்டி மற்றும் அதில் போக்குவரத்துச் செய்யப்பட்ட ரூபா 150,000 பெறுமதியான புகையடித்தல் இயந்திரத்திற்கு நட்டம் ஏற்பட்டிருந்த போதிலும் அது தொடர்பான விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி. 135 (i) | முறைமையில் போதியளவு உள்ளகப் பரிசோதனை ஏற்படும் வகையில் வேலைப்பகிர்வு மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களில் அங்கீகார மளித்தல், பரிந்துரைத்தல், வருகையினை உறுதிப்படுத்தல் போன்ற பணிகளில் பல அல்லது அனைத்தும் ஒரே உத்தியோகத்தரினால் செய்யப்பட்டிருந்த 13 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. |
| (iii) நி.பி. 371(2)(இ) | பணி நிறைவேற்றப்படவுடன் பெற்றுக்கொண்ட முற்பணங்களைத் தீர்த்தல் வேண்டுமாயினும் மீளாய்வாண்டில் 47 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொண்டிருந்த ரூபா 1,283,788 கலப்பு முற்பணங்கள் மற்றும் வெளிக்களக் கல்விச் சுற்றுலாக்களிற்காக 11 சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொண்டிருந்த ரூபா 1,579,778 என்பன 15 தொடக்கம் 126 நாட்கள் வரை தாமதித்து தீர்க்கப்பட்டிருந்தன. |
| (iv) நி.பி. 395(இ) | ஒவ்வொறு மாதத்தின் முடிவிலும் காணப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்களின் நிலைமை தொடர்பில் தொடர்ந்து வரும் மாதத்தின் 15 ஆந் திகதியன்று வங்கிக் கணக்கிணக்கக் கூற்றொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மாணவர் விடுதி பெறுவனவு சேகரிப்புக் கட்டணக் கணக்கிற்காக மீளாய்வாண்டில் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (v) நி.பி. 570 (இ), 571(1) மற்றும் 571 (2) (3) | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 1 தொடக்கம் 6 வருடங்கள் வரை பழமைவாய்ந்த ரூபா 17,105,350 பெறுமதியான கேள்விப்பண மற்றும் பாதுகாப்பு வைப்புக்கள் காணப்பட்டதுடன் அவை தொடர்பில் நிதிப்பிரமாணங்களின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அரையாண்டுக்கொரு முறை காலம்கடந்த வைப்புக்கள் தொடர்பில் பட்டியலொன்றைத் தயாரிக்க வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2006 மார்ச் 01 ஆந் திகதிய தேசிய கொள்வனவு வழிகாட்டல்கள் கையேடு | |
| (i) 6.3.3 ஆம் பிரிவு | திறக்கப்பட்ட கேள்விமனுக்களை மீண்டும் முத்திரையிட்டு தொழில்நுட்ப மதிப்பீட்டுச் சபையின் தலைவருக்கு ஒப்படைக்க வேண்டிய போதிலும் தொழில்நுட்ப மதிப்பீட்டுச் சபையின் கூட்டத்திற்கு முன்னரே உத்தியோகத்தர் ஒருவரிடம் ஒப்படைத்து பரிந்துரை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. |
| (ii) 8.13.4 ஆம் பிரிவு | மதிப்பிடப்பட்ட ஒப்பந்தப் பெறுமதியில் 10மூ இற்கு மேற்பட்ட விலை வேறுபாடுகளிற்காக உயர் கல்வி அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் இரண்டு ஒப்பந்தங்களில் அவ்வாறான விலை வேறுபாடுகளிற்கு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் Payee/Tax/01/2011 ஆம் இலக்க 2011 ஏப்ரல் 18 ஆந் திகதிய சுற்றறிக்கை | நிரந்தர தொழில் இலாபங்களின் மொத்தம் ரூபா 50,000 இற்கு மேற்படுமிடத்து உழைக்கும் போதே செலுத்தும் வரி அறவிடப்பட வேண்டிய போதிலும் நிரந்தரச் சேவை தொழில் இலாபங்களின் மொத்தம் ரூபா 50,000 இற்கு மேற்பட்டு பதவியணி உத்தியோகத்தர்களிற்கு படிகளைச் செலுத்துகையில் உழைக்கும் போதே செலுத்தும் வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. 03 மாத தெரிவுப் பரிசோதனைகளில் அறவிடப்படாதிருந்த உழைக்கும் போதே செலுத்தும் வரித் தொகை ரூபா 98,700 ஆகும். |

(உ) 41/90 ஆம் இலக்க 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை

2.11 ஆம் பந்தி

06 மாதத்திற்கொரு தடவை எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும் ராகம மருத்துவ பீடத்தில் ஓட்டத்தில் காணப்பட்ட 06 வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 95(2) ஆம் இலக்க 1994 யூன் 14 ஆந் திகதிய அரசாங்க முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கை

2 ஆம் பந்தி

அமைச்சரவை, அரசாங்க நிர்வாக அமைச்சு அல்லது திறைசேரியினால் அங்கீகரித்த பிரதிநலன்களை மாத்திரமே தமது ஊழியர்களிற்கு செலுத்த முடியுமாயிருந்த போதிலும் அதற்கு முரணாக பணம் அறவிடப்பட்டு நடாத்தப்பட்டு வருகின்ற பாடநெறி வருமானத்திலிருந்து 07 உத்தியோகத்தர்களிற்கு திறைசேரியின் அங்கீகாரமின்றிரூபா 252,959 செலுத்தப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் வெளிப்பட்டது.

(எ) பீஈடீ/12 ஆம் இலக்க 2003 யூன் 20 ஆந் திகதிய அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கை

(i) 5.2.1 ஆம் அத்தியாயம்

இலக்குகளை அடைந்து கொள்வதற்காக ஆண்டொன்று தொடங்குவதற்கு முன்னரே வருடாந்த கணக்குகளைச் சமர்ப்பிக்கும் படிவத்திற்கமைய பாதீடொன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை.

(ii) 9.3.1(i) ஆம் அத்தியாயம்

பணம் அறவிடப்பட்டு நடாத்தி வரப்படுகின்ற பாடநெறிகளிற்காக திறைசேரியின் அங்கீகாரமின்றி தற்காலிக பதவியணியினை ஆட்சேர்த்து ரூபா 10,000 இலிருந்து ரூபா 21,000 வரை 07 உத்தியோகத்தர்களிற்கு மாதாந்தப் படியாக ரூபா 85,000 செலுத்தப்பட்டிருந்தமை தெரிவுக்

கணக்காய்வுப் பரிசோதனைகளில் வெளிப்பட்டது.

(ஏ) 2009 நவம்பர் 13 ஆந் திகதிய 438 ஆம் இலக்க அரசாங்க நிதித் திணைக்களச் சுற்றறிக்கை

02 (அ) ஆம் உப பிரிவு

ராகம மருத்துவ பீடத்தின் களஞ்சிய இருப்பில் அசைவுறாத காலாவதியான மற்றும் பழுதடைந்த 30 விடயங்கள் அவதானிக்கப்பட்டதுடன் அது தொடர்பில் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஓ) 2011 ஏப்ரல் 02 ஆந் திகதிய 45 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களச் சுற்றறிக்கையின் உப பிரிவுகள்

(i) 3(i) ஆம் உப பிரிவு

பல்கலைக்கழகத்தின் நிரந்தரப் பதவியணியின் விரிவுரையாளர்கள் மற்றும் அதற்கு மேற்பட்ட தரத்திலுள்ள விரிவுரையாளர்களிற்கு மாத்திரம் ஆய்வுப் படியினை செலுத்த முடியுமான போதிலும் தகைமைகளைப் பூர்த்தி செய்யாத பயிலுனர் விரிவுரையாளர்கள் மற்றும் ஏனைய உத்தியோக த்தர்களிற்கும் இந்தப்படி செலுத்தப்பட்டிருந்தது.

(ii) 4(அ) ஆம் உப பிரிவு

2011 ஜனவரி 01 தொடக்கம் திசெம்பர் 31 வரை ஆய்வுப் படியினைப் பெற்றுக்கொள்வதற்கு தகைமை பெற்றிருந்த உத்தியோகத்தர்களினால் ஆய்வுத் திட்டமொன்று, ஆய்வுகள் முகாமைத்துவ குழுவிற்குச் சமர்ப்பித்து அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் அவ்வாறு அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளாது பல்கலைக்கழகத்தின் பதவியணியிலுள்ள 434 விரிவுரையாளர்களிற்கு சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு முரணாக ரூபா 53,619,991 ஆய்யுப் படியாக செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

-------------------------------

### 3.1 நிதி விளைவுகள்

-------------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி 2011 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிறுவன செயற்பாடுகளிலிருந்தான நிதி விளைவுகள்மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தைக் கணக்கிலெடுக்க முன்னர் ரூபா 1,094,214,786 பற்றாக்குறையொன்றானதுடன் அதனையொத்த முன்னைய ஆண்டுக்கான பற்றாக்குறை ரூபா 1,098,772,333 ஆகும். மீளாய்வாண்டுக்கான மீண்டெழும் செலவினங்களுக்காக அரசாங்கத்திடமிருந்து கிடைத்திருந்த ரூபா. 1,167,151,527 மானியம் காரணமாக மீளாய்வாண்டிற்கானமிகை ரூபா 72,936,741 ஆக காணப்பட்டது. முன்னைய ஆண்டின்மீண்டெழும் செலவினங்களுக்காக அரசாங்கத்திடமிருந்து கிடைத்திருந்த ரூபா. 984,910,348 மானியம் காரணமாக அவ்வாண்டின் பற்றாக்குறைரூபா 113,861,985வரை குறைவடைந்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதிவிளைவுகளில் ரூபா 186,798,726 முன்னேற்றத்திற்கு வெளிவாரிப் பரீட்சைகளினால் கிடைக்கப்பெற்ற வருமானம் மற்றும் அரசாங்க மானியம் என்பன ரூபா 248,661,770 ஆல் அதிகரித்திருந்தமை பிரதானமாக செல்வாக்குச் செலுத்தியிருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

### 4.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

-------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

அ. சாத்தியவளக் கற்கையொன்றின்றி 2009 ஓகஸ்ட் மாதத்தில் ரூபா 23,383,000 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட செவிப்புல கற்புல முறைமைக்கு (Audio Visual System) மீளாய்வாண்டின் இறுதியளவில் 2 ½ ஆண்டுகள் கடந்திருந்தும் எதிர்பார்த்த நோக்கத்திற்காக பயன்படுத்தாது வைக்கப்பட்டிருந்தது.

ஆ. தகைமைபெற்ற மின்னியல் பொறியியலாளர் ஒருவரினால் பல்கலைக்கழகத்திற்கு தேவையா்ன மின்சாரக் கேள்வி இயலளவு தீர்மானிக்கப்படாதிருந்ததுடன் அவ்வாறான பரிந்துரையின்றி உள்ளக மின்சார இணைப்பு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் நீண்ட காலமாகவே அவ்வப்போது மின்சாரத் தடையேற்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

## 4.2 நிதியங்களின் குறைப் பயன்பாடு

-----------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2007 ஆம் ஆண்டிலிருந்து 2011 திசெம்பர் வரை 06 ஆய்வுகளிற்காக ரூபா 1,129,425 ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 601,219 செலவிட்ட பின்னர் கணக்ககளில் ரூபா 528,206 சேமிப்பாகியிருந்தது.

(ஆ) 08 நடைமுறை மற்றும் சேகரிப்புக் கணக்குகளில் ரூபா 115 மில்லியன் ஆண்டு முழுவதும் மேலதிகமாக வைத்திருக்கப்பட்டிருந்ததுடன் இந்தப் பணத்தினை வருடாந்தம் 6% சேமிப்புக் கணக்கொன்றிலோ அல்லது குறுங்கால ஏனைய முதலீடொன்றிலோ ஈடுபடுத்தியிருப்பின் ரூபா 4,599,473 வருமானத்தினை பெற்றுக்கொள்ள முடிந்திருக்கும்

## 4.3 இணங்காணப்பட்ட இழப்புக்கள்

------------------------------------------------

ஆண்டு இருப்பு மெய்மையாய்வில் களனி மற்றும் ராகம வளவிலுள்ள பிரதான மற்றும் பேணுகை களஞ்சியங்களில் ரூபா 448,175 பெறுமதியான 78 பொருள் விடயங்களில் பற்றாக்குறைகள் அவதானிக்கப்பட்டிருந்தன. இப்பற்றாக்குறைக்கான காரணங்கள் வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன் அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களை இனங்கண்டு இழப்பினை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 ஒப்பந்த நிர்வாக குறைபாடுகள்

--------------------------------------------------

### 4.4.1 ஒப்பந்த நிர்வாகம்

------------------------------------

06 நிர்மாண ஒப்பந்தங்களிற்குரிய உடன்பட்ட கிரயம் ரூபா 258,184,732 ஆன போதிலும் 2011 திசெம்பர் 31 வரை ரூபா 418,875,992 செலுத்தப்பட்டிருந்தமையால் உடன்பட்ட பெறுமதியினைக் காட்டிலும் மேலதிமாக செலுத்தப்பட்டிருந்த தொகை ரூபா 160,691,260 ஆகும். இந்த 06 ஒப்பந்தங்களில் இரண்டினைப் பூர்த்தி செய்வதற்கு 1 ½ வருடம் வீதமும் ஓர் ஒப்பந்தம் ஒரு ஆண்டினாலும் தாமதம்

செய்யப்பட்டிருந்தது. ஒப்பந்த உடன்படிக்கையின் இல. 49(1) ஆம் பந்தியின் பிரகாரம் தாமதம் செய்யப்பட்டிருந்த காலத்திற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 14,034,750 தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 4.4.2 வெளித் தரப்பினர்களிடமிருந்து சேவைகளைப் பெற்றுக்கொள்ளல்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

அ. பல்கலைக்கழகத்தின் கேள்வி நிபந்தனைகளின் 08 ஆம் பந்தியின் படி உடன்படிக்கையில் கைச்சாத்திட முன்னர் பிணைப்பணம் வைப்புச்செய்யப்பட வேண்டிய போதிலும் உடன்படிக்கைக் காலம் 06 மாதங்களை தாண்டியதன் பின்னர் பிணைப்பணம் வைப்பச் செய்யப்பட்டிருந்த 2 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் அப்பிணைகளின் பெறுமதி ரூபா 30,000 ஆகும்.

ஆ. சேவை வழங்குனர்களுடன் சேவைக்கால தொடக்கத்தில் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுதல் வேண்டுமாயினும் 14 வழங்குனர்களுடன் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுகையில் சேவைக் காலத்தில் 03 தொடக்கம் 09 மாதம் வரை காலதாமதம் செய்யப்பட்டிருந்தது.

இ. உடன்படிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு மாதமும் 05 ஆந் திகதிக்கு முன்னர் தீர்மானிக்கப்பட்ட மாதாந்த வாடகையினை செலுத்த வேண்டியிருந்ததுடன் அவ்வாறு செலுத்தாதுள்ள ஒவ்வொரு மாதத்திற்காகவும் மிகை அறவீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 08 வழங்குனர்களிடமிருந்து ரூபா 4,275 மிகைஅறவீடும் ரூபா 46,750 நிலுவை வாடகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 4.5 நூலக நிர்வாகம்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

அ. தலைமை நூலகத்தில் புத்தகங்களின் மெய்மையாய்வு இறுதியாக 2002 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அந்த மெய்மையாய்விலிருந்து இது வரை 08 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் புத்தக மெய்மையாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

ஆ. 2000 ஆம் ஆண்டிலிருந்து 2005 ஆம் ஆண்டு வரை 76 விரிவுரையாளர்களிற்கு வழங்கப்பட்டிருந்த ஆயினும் மீளளிக்கப்படாத புத்தகங்களின் எண்ணிக்கை 211 ஆனதுடன் அப் பத்தகங்களின் பெறுமதி ரூபா 360,267 ஆகும். அப்புத்தகங்களில் ஒரு பிரதி வீதம் நூலகத்தில் காணப்பட்ட ரூபா 29,487 பெறுமதிகொண்ட 03 புத்தகங்கள் ஒரு விரிவுரையாளரினாலும் ரூபா 30,462 பெறுமதி கொண்ட 02 புத்தகங்கள் இரண்டு விரிவுரையாளர்களினாலும் எடுத்துச் செல்லப்பட்டு மீளளிக்கப்பட்டிருக்கவில்லை.

இ. தலைமை நூலகத்தில் பொறுத்தப்பட்டள்ள பாதுகாப்பு புகைப்படக் கருவி முறைமை (CCTV) 2010 செப்தம்பர் மாதத்திலிருந்து செயலிழந்து காணப்பட்டது. அதனைத் திருத்துவதற்கு இது வரை நடவடிக்கை

எடுக்கப்படாதிருந்தமையால் நூலகப் புத்தகங்களிற்கான பாதுகாப்பு தொடர்பில் திருப்திப்பட முடியவில்லை.

ஈ. ராகம மருத்துவ பீட நூலகத்தினால் எடுத்துச்செல்வதற்கு வழங்கப்பட்டு 1 தொடக்கம் 5 ஆண்டுகள் கடந்திருந்த ரூபா 35,832 பெறுமதி கொண்ட 09 நூலகப் புத்தகங்களை மீளாய்வாண்டின் இறுதி வரை மீளப் பெற்றுக்கொள்வதற்கோ அல்லது நட்டத்தினை அறவிட்டுக் கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

-----------------------------------------------------------

### 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

----------------------------------

மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த நிகழ்ச்சித்திட்டப் பாதீட்டின் 03 செலவின விடயங்களில் உள்ளபடியான செலவினமானது 10% இனால் பாதிடப்பட்ட செலவினத்தினை மிகைத்திருந்ததுடன் ஒரு செலவின விடயத்தில் பாதிடப்பட்ட செலவினைக் காட்டிலும் உள்ளபடியான செலவினம் 40% இனால் குறைவடைந்திருந்தது. புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தலிற்கான செலவினம் மதிப்பிடப்படாதிருந்ததுடன் உள்ளபடியான செலவினம் ரூபா 17,030,527 ஆக காணப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

கணக்காய்வுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழக உபவேந்தரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்களின் பால் விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) கணக்கீடு
(ஆ) நானாவித முற்பணங்கள்
(இ) நூலக நிர்வாகம்
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்
(உ) விடுதி நிர்வாகம்
(ஊ) வாகனப் பாவனை
(ஊ) பயன்படுத்தாத மற்றும் குறைவாகப் பயன்படுத்திய சொத்துக்கள்
(எ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு
(ஏ) உத்தியோகபூர்வ இல்லங்களின் கட்டுப்பாடு

ஒப்பம்: எச். ஏ. எஸ். சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

# 22. கணக்காய்வு குழு அறிக்கை - 2011

## கணக்காய்வு குழுவின் உள்ளடக்கம்

பல்கலைக்கழகக் கணக்காய்வுக் குழுவானது, அதற்குப் பொறுப்புக்கூறும் பேரவையின் உபகுழுவொன்றாக முறையாக அமையப் பெற்றதுடன் அது, நிறைவேற்றுனர் பேரவை அல்லாத மூன்று உறுப்பினர்களை முழுமையாகக் கொண்டதாகும். பின்வரும் பேரவை உறுப்பினர்கள் 2011 ஆம் ஆண்டில் கணக்காய்வுக் குழுவில் செயலாற்றினர்.

| **உறுப்பினர்** | **2011 இல் கூட்டத்தில் பங்குபற்றல் (பங்குபற்றியமை / பங்குபற்ற தகவுத்திறன்)** |
|---|---|
| 1. திரு.ஹரிஸ்சந்திர வாசலதந்திரி (தலைவர்) | 4/4 |
| 2. டாக்டர் ஆர்.பி. ஏக்கநாயக்க | 4/4 |
| 3. திரு.எல்.ஜே. பற்றிக் அலெக்சிஸ் சில்வா | 4/4 |

மேற்குறிப்பிட்ட உறுப்பினர்களுக்கு மேலதிகமாக, கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களத்தின் உறுப்பினர்களும் அவதானிப்பாளர்களாக பங்குபற்ற அழைக்கப்பட்டனர்.

### கூட்டங்கள்

பீஈடி/31 ஆம் இலக்க பொது தொழில்முயற்சி சுற்றறிக்கையின்படி வருடமொன்றுக்கு குறைந்தபட்சம் 4 தடவைகள் குழு கூடுவதற்கு தேவைப்படுத்தப்பட்டுள்ளது. மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில் குழுவானது 4 தடவைகள் கூடியதுடன் உள்ளக, வெளியக கணக்காய்வு அறிக்கைகள் இக்கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டன. குழுவின் கூட்ட அறிக்கைகள், தகவல் மற்றும் தேவையான நடவடிக்கைகள் பொருட்டு பல்கலைக்கழக நிருவாக மன்றத்தில் கிடைக்கச் செய்யப்பட்டுள்ளன.

### பிரதான பொறுப்புடைமைகள்

கணக்காய்வுக் குழுவின் பிரதான குறிக்கோள் யாதெனில், பல்கலைக்கழகத்தின் நிதி மற்றும் பிற தொடர்புற்ற அலுவல்கள் தொடர்பிலான அதன் பொறுப்புடைமைகளை பயனுறு வகையில் மேற்கொள்வதற்கு பேரவைக்கு உதவுவதேயாகும். பிரதான பொறுப்புடைமைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது.

1. நிதிக்கூற்றுக்கள், நிதி அறிக்கைகள் மற்றும் கணக்காய்வு செயன்முறை என்பவற்றின் ஒன்றிப்பை மீளாய்வு செய்தலும், கண்காணித்தலும்.
2. பல்கலைக்கழகத்தின் நிதி மற்றும் பிற தொடர்புற்ற அலுவல்கள் தொடர்பிலான ஏதேனும் விடயத்தைப் பரீட்சித்தல்.

3. உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தையும், நிகழ்ச்சித் திட்டங்களையும் கண்காணித்தல்.
4. உள்ளக, வெளியக கணக்காய்வு அறிக்கைகள் தொடர்பில் மீளாய்வு செய்து நடவடிக்கை எடுப்பதும், பரிந்துரைகள் பற்றி தொடர் நடவடிக்கை எடுப்பதும்.
5. உள்ளகக் கட்டுப்பாட்டு முறைகளின் பயனுறு செயற்பாட்டை மீளாய்வு செய்தலும் கண்காணித்தலும்.
6. வருடாந்த உள்ளகக் கணக்காய்வுத் திட்டங்களையும், நிகழ்ச்சித் திட்டங்களையும் அங்கீகரித்தல்.

## இவ்வாண்டு காலப்பகுதியில் நடவடிக்கைகள்

மீளாய்வு ஆண்டு காலப்பகுதியில் பின்வரும் நடவடிக்கைகளை குழு மேற்கொண்டது.

**1. உள்ளகக் கணக்காய்வுத் திட்டங்களையும், நிகழ்ச்சித் திட்டங்களையும் அங்கீகரித்தலும், கண்காணித்தலும்.**

2011ம் ஆண்டு பொருட்டான உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தையும், உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தையும் குழு அங்கீகரித்து வருடம் முழுவதும் அதன் நிலைமையைக் கண்காணித்தது. உள்ளகக் கணக்காய்வின் பயனுறுத்தன்மை, உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பரீட்சித்தல் தொழிற்பாடு மற்றும் செயலாற்றுகை என்பவற்றை குழு மீளாய்வு செய்து கண்காணித்தது.

**2. சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுடன் அமைந்தொழுகுதல்**

பிரயோகிக்கத்தக்க சட்டங்கள், பிரமாணங்களுடன் அமைந்தொழுகும் நிலை, மற்றும் பணிக்கொடைக் கொடுப்பனவு, சேமலாப நிதி மீதிகளை விடுவித்தல் போன்ற நியதிச்சட்டக் கொடுப்பனவுகளைத் தீர்த்தல் தொடர்பில் உள்ளகக் கணக்காய்வாளர், வெளியகக் கணக்காய்வாளர் ஆகியோர்களால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளைக் கணக்காய்வுக்குழு மீளாய்வு செய்தது.

பேரவைக்குத் தேவையான பரிந்துரைகளை வழங்குவதன் மூலம் நிரந்தர, தற்காலிக கல்விசார் பதவியினர்களின் தாமதித்த சேமலாப நிதிய மீதி வேலைப்பழுவை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**3. முறி மீறிய நடவடிக்கைகளை தொடர்ந்து மீளாய்வு செய்து கண்காணித்தல்**

முறியை மீறிய பதவியினரிடமிருந்து மீள அறவிடும் செயன்முறையின் நிலைமை நடைபெற்ற ஒவ்வொரு கூட்டத்திலும் குழு தொடர்ந்து மீளாய்வு செய்து கண்காணித்தது. இந்த பயன்மிக்க செயற்பாடு காரணமாக, முழு முறி பெறுமதியில் 04 கல்வி சார் பதவியினரிடமிருந்து முழுப்பெறுமதி இவ்வாண்டில் மீள அறவிடப்பட்டது. மேலும் 03 பேரிடமிருந்து அவர்களின் சேமலாபநிதியிலிருந்து கழிப்பதற்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இதன்மூலம் அவர்களின் சேமலாபநிதி பல்கலைக்கழகத்தால் பெறப்படும் போது அறவிடப்படும். மேலும் 04 கல்விசார் பதவியினர் தவணை முறையில் செலுத்தி

வருவதுடன் மேலும் 04 பேரிடமிருந்து நிதியைப் பெற்றுக் கொள்வதற்காக அவர்களிற்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**4. உள்ளக் கட்டுப்பாட்டு முறைமைகளை மீளாய்வு செய்தலும் பலப்படுத்தலும்**

நிதி அறிக்கையிடல் மற்றும் வாகன நிர்வாகம் (மருத்துவ பீடம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது), ஒப்பந்த நிர்வாகம், பல்கலைக்கழக உணவகம் மற்றும் கடைகள் பராமரிப்பு, மூலதன பொருட்களைக் கொள்வனவு செய்தல், நூலகப் புத்தகங்களை இரவல் கொடுத்தல், வருடாந்த களஞ்சிய கணக்கெடுப்பு, பதிவேட்டு இடாப்புக்களைப் பேணுதல், தீர்க்கப்படாத முற்பணங்களை அறவிடுதல் போன்ற முக்கிய விடயங்கள் தொடர்பிலான பிற கட்டுப்பாடுகள் மீது பல்கலைக்கழக உள்ளக கட்டுப்பாட்டு பயனுறுத் தன்மையை மீளாய்வு செய்தலும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை பலப்படுத்தத் தேவையான பரிந்துரைகளை செய்தலும்.

**5. கணக்காய்வுக் குழுக்கூட்டங்கள்**

2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டில் நான்கு கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடைபெற்றன. கணக்காய்வாளர் கலைமையதிபதி திணைக்களத்தின் பிரதிநிதியொருவர், அழைப்பின்பேரில் அவதானிப்பாளராக கணக்காய்வுக் குழுக்கூட்டங்கள் அனைத்திற்கும் வருகை தந்தார். குழு, வருகை தருமாறு அழைப்பு விடுத்த பல்கலைக்கழகத்தின் பிற பதவியினரும் வருகை தந்தனர். சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர் குழுவின் நடவடிக்கையை பூர்த்தி செய்யும் வகையில் குழுவின் செயலாளராக செயற்பட்டார்.

**முடிவு**

பல்கலைக்கழகத்தின் மீளாய்வு செய்யப்பட்ட உள்ளகக் கட்டுப்பாடுகளின் பயனுறுதித்தன்மை பற்றி கணக்காய்வுக் குழு திருப்தியடைந்ததுடன் 2011 ம் ஆண்டினில் நிலுவையாகவுள்ள விடயங்கள் தொடர்பில் குழுவினால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் மீது எடுத்த நடவடிக்கைகள்பால் தொடர் நடவடிக்கை எடுத்தது.

தலைவர்
கணக்காய்வுக் குழு
களனிப் பல்கலைக்கழகம்

## களனிப்பல்கலைக்கழகத்தின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் 1978 ம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் 108 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

உமது சம இலக்கமுடையதும் 2012.08.20 திகதியுடையதுமான கடிதத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்குரிய கணக்குகள் தொடர்பில் பல்கலைக்கழக சட்டத்தின் 108 (2) ஆம் பிரிவின் பிரகாரமான அறிக்கை தொடர்பில் பல்கலைக்கழக சட்டத்தின் 108 (3) ஆம் பிரிவின் பிரகாரமான கீழே குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புரைகள் 16.10.2012 இல் நடைபெற்ற பல்கலைக்கழக பேரவையில் 396 வது கூட்டத்தில கருத்திலெடுக்கப்பட்டதன் பிற்பாடு பின்வருமாறு உங்களுக்கு சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்புடமை**

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

**1.4 தகுதிவாய்நத கணக்காய்வு அபிப்பிராயத்தின் அடிப்படை**

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 தகுதிவாய்ந்த அபிப்பிராயம்**

**2.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பிலான கருத்துரைகள்**

**2.2.1 நிதிக்கூற்றுக்கள் தொடர்பிலான வெளிப்படுத்தல்கள்**

**2.2.2 கணக்கீட்டு நியமங்கள்**

**நூலக வைப்புக்கள்**

2010.11.09 இல் நடைபெற்ற பல்கலைக்கழக பேரவையின் 374 வது கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட கற்கைநெறிக் கட்டளை விதிகளின் பிரகாரம் மாணவர்களிடமிருந்து கற்கைநெறிக் கட்டணத்துடன் நூலக வைப்பாக அறவிடப்பட்ட ரூபா 10,603,837.00 பிரதான நூலகம் மற்றும் பீட நூலகங்களின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு உபயோகிக்கப்படுவது என தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் குறித்த தேவைகளுக்காக பாவிக்கப்பட்டதுடன் இந்நிதி பல்கலைக்கழக வருமானமாக கணக்கிலெடுக்கப்படாமல் பிறிதொரு கணக்கில்

வைப்பிலிடப்பட்டதாக காட்டப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் மேற்படி விடயம் பல்கலைக்கழக பேரவையின் கவனத்திற்கு கொண்டு வரப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### 2.2.3 செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

i. இரண்டு செலுத்தப்பட வேண்டிய கணக்குகளில் பற்று நிலுவையாக உள்ள ரூபா 333,187.00 மறு ஆய்வு செய்யப்பட்டதுடன் பொருத்தமான திருத்தங்களுடன் கணக்கிலெடுப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன.

ii. 10 செலுத்தப்பட வேண்டிய கணக்குகள் ஆய்வு செய்யப்பட்டன.

(அ) செலுத்தப்பட வேண்டிய காசோலை வைப்புக்கள் - மருத்துவ பீடம் - ரூபா. 668,897.00 செலுத்தப்பட வேண்டியவையாக அடையாளம் காணப்பட்ட மீதிகள் தவிர்ந்த ஏனையவை 2012 ம் ஆண்டிற்குரிய வருமானத்துடன் சேர்ப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) ஊழியர் வைப்பு – மருத்துவ பீடம் - ரூபா 111,621.00. மேற்படி விடயம் ஐந்து ஆண்டுகளுக்கு முற்பட்ட விடயம் என்பதால் உரிய தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியாமல் இருக்கின்றது. ஆயினும் உரிய திருத்தங்களுடன் 2012 ம் ஆண்டு வருமானத்துடன் சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(இ) பிடித்துவைத்தல் வரி (வெளிவாரிப் பரீட்சைகள்) ரூபா 115,229.00 – மேற்படி மீதி 2010 ம் ஆண்டிலிருந்து முற்கொணரப்பட்டுள்ளது. பொருத்தமான திருத்தங்கள் 2012 ம் ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

(ஈ) வெளிவாரிப் பரீட்சைக்கான செலவுகளுக்கான வைப்புக்கள் - ரூபா 515,213.00 – பொருத்தமான திருத்தங்களுடன் மேற்படி மீதி 2012 ம் ஆண்டுக்குரிய வருமானத்துடன் சேர்ப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(உ) மருத்துவக் காப்புறுதி மீள்பெறுவனவு - ரூபா 60,345.00 – 2012 ம் ஆண்டிற்குரிய வருமானமாகக் கொண்டுவருவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

(ஊ) செலுத்தப்பட வேண்டிய ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம், ஓய்வூதியம் மற்றும் பாதுகாப்பு நிதியம் போன்றவை ஆய்வு செய்யப்பட்டு பொருத்தமான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

(எ) தருண அருண திட்டம் - ரூபா 2,651,024.00

ஏ) கெல்ற் திட்டம் - ரூபா 2,434,232.00

} இவை சிறப்பு திட்டங்களின் கீழ் பெறப்பட்ட நிதி என்பதால் தொடர்ந்து வைக்கப்பட்டுள்ளன.

(ஐ) ஏனையவை - ரூபா. 4,855.00 – வருமானமாக மாற்றுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**2.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

| | | |
|---|---|---|
| (அ) | 1978 ம் ஆண்டு 16 ம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் 135 வது பிரிவு மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் XIX வது பந்தி | அரச வதிவிட தாபனக்கோவையின் பிரிவு 5:2:4 இன் பிரகாரம் பேரவையின் அங்கீகாரம் பெறப்பட்டு அதன் பிரகாரம் வதிவிடக் குழுவினால் வாடகை தொடர்பிலான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிக்கட்டுப்பாடுகளின் பிரிவு நி.க 104(3)(4) | மருத்துவ பீடத்தின் முச்சக்கரவண்டியின் விபத்து தொடர்பிலான வழக்கு ஒன்று கம்பஹா நீதிமன்றத்தில் காவல்துறையினரால் பதிவு செய்யப்பட்டு இரண்டு தவணைகள் விசாரணைகள் நடைபெற்றுள்ளன. தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்தினரால் மேற்படி முச்சக்கரவண்டியின் திருத்தம் தொடர்பான மதிப்பீடு வழங்கப்பட்டு திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்படி சம்பவம் நடைபெற்ற போது பயணம் செய்ய பல்கலைக்கழக அலுவலர்கள், மற்றும் கொண்டு செல்லப்பட்ட புகையூட்டல் கருவி ஆகியவற்றுக்கான இழப்பீடுகள் பெற்றுக்கொள்ளல் தொடர்பான நடவடிக்கைகள் சட்ட நடவடிக்கைகள் முடிவடைந்ததன் பின்னர் மேற்கொள்ளப்படும். இனிவரும் காலங்களில் இவ்வகையான விபத்துக்கள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு அறிவிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |
| (இ) | நி.க 135(i) | மிகவும் தவிர்க்க முடியாத அதியாவசியமான வேளையில் இச்சம்பவம் இடம்பெற்ற போதும், இனிவரும் காலங்களில் இவ்வகையான சம்பவங்களை குறைத்துக் கொள்ளுமாறு அலுவலர்கள் பணிக்கப்பட்டுள்ளனர். |
| (ஈ) | நி.க 371 (2) (c) | முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது இவ்வாண்டில் முற்பணம் மீள் செலுத்துகை முன்னேற்றகரமாக உள்ளது. எதிர்காலத்தில் மேலும் முன்னேற்றுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. |
| (உ) | நி.க 395(c) | மேற்படி வங்கி கணக்கிணக்கக் கூற்று ஏற்கனவே கணக்காய்வு நோக்கத்திற்காக சமர்ப்பிக்கப் பட்டுள்ளது. தற்போதைய கணக்கிணக்கக் கூற்று |

| | | |
|---|---|---|
| | | உரிய திகதியில் தயாரிக்கப்பட்டுள்ளது. |
| (ஊ) | நி.க 570(c), நி.க 571(1), நி.க 571(2), (3) | 31.12.2011 இல் கணக்குகள் தீர்ப்பதற்கு முன்னர் 19.08.2011 இல் குறிப்பிட்ட பிரிவில் இருந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பிரகாரம் ரூபா 17,105,350.82 பெறுமதியான வைப்பாக அறிவிக்கப்பட்டமையால் மேற்படி தவிர்ந்த ஏனைய வைப்புக்கள் வருமானமாக மாற்றப்பட்டுள்ளன. தற்போது ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கொருமுறை தவணை கடந்த வைப்புக்கள் தொடர்பான பட்டியல் தயாரிக்கப்படுகின்றன. |
| (எ) | 01 மார்ச் 2006 திகதியிட்ட தேசிய கொள்முதல் வழிகாட்டி<br>1. பிரிவு 6.3.3 | சில சந்தர்ப்பங்களில் தொழில்நுட்ப ஆய்வுக்குழுவிற்கு சமர்ப்பிப்பதற்கு முன்னர் துறைசார்ந்தவர்களின் சிபார்சுகள் பெறப்படுகின்றன. **உதாரணம்-** இரசாயனப் பொருட்கள், விஞ்ஞான உபகரணங்கள், கணணிகள், ஏனையவை. துறைசார்ந்தவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் தொழில்நுட்ப ஆய்வுக் குழுவிற்கு முன்வைக்கப்படுகின்றது. |
| | 2. பிரிவு 8:13:4 | குறிப்பிடப்பட்ட இரண்டு ஒப்பந்தங்கள் தொடர்பான விபரங்கள் கீழ்வருமாறு.<br>**1. ஹெட்டியாவத்த மாணவர் விடுதிக்கட்டிடம்**<br>2008.04.30 இல் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்படி ஒப்பந்தத்திற்கான மதிப்பீடு 75 மில்லியனில் இருந்து 160 மில்லியனாக மாற்றியமைக்கப்பட்டது. இதற்கு உரிய அனுமதிகள் பெறப்பட்டுள்ளமையால் மதிப்பீட்டுப் பெறுமதி அதிகரித்துள்ளதாக காட்டப்படவில்லை.<br>**2. புதிய உணவக கட்டிடம்**<br>இறுதிக் கொடுப்பனவுப் பட்டியல் இதுவரை சமர்ப்பிக்கப்படாமையால் மதிப்பீட்டுப் பெறுமதி அதிகரிக்கப்பட்டுள்ளமை தொடர்பான எந்த ஒரு முடிவும் எடுப்பது சாத்தியமற்றது. |
| (ஏ) | உள்நாட்டு இறைவரித் திணைக்கள 2011 ஏப்ரல் 18 ம் திகதிய Paye/Tax/01/2011 இலக்க சுற்றுநிருபம் | தற்போதைய வரி நிலுவைகள் கணிப்பிடப்பட்டு உரிய வரிநிலுவைகள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்துவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. |
| (ஐ) | பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 41/90 மற்றும் 1990 ஒக்ரோபர் 10 ம் திகதிய சுற்றறிக்கையின் பந்தி இல.2.11 | NA-5949, PB0519, NB-2585, 61-508, 61-5671 மற்றும் 50-5173 ஆகிய வாகனங்களிற்கான எரிபொருள் ஆய்வு அறிக்கைகள் பெறப்பட்டுள்ளன. மற்றும் 202-0892, 63-2954, 30-9624 ஆகிய வாகனங்கள் திருத்த வேலையில் உள்ளதால் அவற்றின் திருத்த |

| | | |
|---|---|---|
| | | வேலைகள் முடிவடைந்ததும் எரிபொருள் பாவனை தொடர்பான அறிக்கை பெறுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |
| (ஓ) | 1994 ஜுன் 14 ம் திகதிய பொது முயற்சிகள் திணைக்கள 95(2) இலக்க சுற்றறிக்கை<br><br>பந்தி 2 | சுயநிதிக்கொடுப்பனவு கற்கைநெறிகள் பல்கலைக்கழகத்தின் அபிவிருத்திச் செயற்பாடு களுக்கு உயரிய பங்களிப்பினை வழங்குகின்றன. ஏற்கனவே உள்ள ஊழியர்களே இதற்குரிய கடமைகளைப் புரிகின்றனர். இவர்கள் தங்கள் கடமைகளுக்கு மேலதிகமாகவே இக்கடமைகளைப் புரிவதால் அவர்களின் சேவைகளை கௌரவிக்கும் பொருட்டும் ஊக்குவிக்கும் பொருட்டும் நிதிக்குழு மற்றும் பேரவை ஆகியவற்றின் அனுமதியுடன் இக்கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. இக்கொடுப்பனவுகள் இத்தகைய கற்கை நெறிகளினை உரியமுறையில் நடத்திச் செல்வதற்கு உந்துசக்தியாக உள்ளது. |
| (ஓ) | 2003 ஜுன் 20 ம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் PED/12<br><br>1. பந்தி | வரவு செலவுத் திட்டப் பத்திரங்கள் நிதிச்சுற்றறிக்கைகள் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஒவ்வொரு ஆண்டும் வருடாந்த வரவு செலவுத்திட்ட பத்திரம் தொடர்பாக வெளியிடப்படும் மாதிரிகள் ஆகியவற்றின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்படுகின்றன. எவ்வாறாயினும் வரவு செலவுத்திட்ட பத்திரங்கள் வருடாந்த கணக்குகளின் மாதிரிகளுக்கமைய 01.11.2012 இற்கு முன்னர் தயாரிக்கப்பட்டு முன்வைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுன்றன. |
| | 2. பந்தி 9.3.1 (i) | வெளிவாரிக் கற்கைநெறிக் கடமைகளின் வேலைப்பழு காரணமாக இத்தகைய எழுத்துக் கடமைகளை நிரந்தர அலுவலர்களை கொண்டு ஆற்ற முடியாமையால் இந்த அலுவலர்களின் சேவைகள் பெறப்பட்டன. இவர்களுக்குரிய கொடுப்பனவுகள் பேரவை மற்றும் நிதிக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வரவுசெலவு திட்டத்தின் பிரகாரம் கற்கைநெறிகளின் வருமானத்திலிருந்து வழங்கப்படுகின்றது. அவர்களின் கொடுப்பனவு ஒவ்வொரு கற்கைநெறிகளினதும் வருமானம் மற்றும் கடமைகள் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது. |
| (ஔ) | 2009 நவம்பர் 13 ம் திகதிய பொது நிதித் திணைக்கள 438 ம் இலக்க | மருத்துவ பீட களஞ்சியத்தில் பாவனையற்று பழுதடைந்து இருக்கும் பொருட்களின் பதிவினை 2012 |

| | | |
|---|---|---|
| | சுற்றறிக்கையின் உபபிரிவு 2 (அ) | இலிருந்து அகற்றுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. |
| (ஃ) | 2011 ஏப்ரல் 2 ம் திகதிய 45 ம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் உபபிரிவு<br><br>1. உபபிரிவு 3 (i) | 12.05.2011 ம் திகதிய உயர்கல்வி அமைச்சின் கடிதம் மற்றும் 2011.07.11 திகதிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 11.07.2011 திகதிய 11/2011 இலக்க தாபனச் சுற்றறிக்கை ஆகியவற்றின் பிரகாரம் இக்கொடுப்பனவு வழங்கப்படுகின்றது. |
| | 2. உபபிரிவு 4 (a) | 2011 ஏப்ரல் 2 ம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் பீடவாரியாக நியமிக்கப்பட்ட குழுவிற்கு சமர்ப்பிக்கப்படும் ஆய்வு வேலைகள் அடிப்படையில் அனைத்து கல்விசார் ஆசிரியர்களுக்கும் வழங்கப்படுகின்றது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ குறைபாடுகள்

(அ) ஒவ்வொரு பீடங்களிலும் பல்லூடக வலையமைப்புத் தொகுதியினை நிறுவுவதன் மூலம் அதனைப் பயன்படுத்தி வெளிவாரியாக பதிவுசெய்த மாணவர்களுக்குரிய கருத்தரங்குகள், விரிவுரைகள் ஆகியவற்றினை மேற்கொள்வதற்குரிய நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) பல்கலைக்கழகத்தின் புதிய கட்டிடங்களுக்கான மின்சார சுற்றுக்கள் மற்றும் கொள்ளளவு தொடர்பாக தகுதிவாய்ந்த பொறியியலாளரிடமிருந்து அறிக்கை ஒன்று பெறப்பட்டுள்ளது. மேற்படி விடயம் பழைய கட்டிடங்களுக்கு புதிய மின் உபகரணங்களைப் பொருத்தும்போதும் ஏற்புடையதாகும். எவ்வாறாயினும் மொறட்டுவைப் பல்கலைக்கழக மின் பொறியியலாளரிடமிருந்து பல்கலைக்கழக மின் கொள்ளளவு தொடர்பான மதிப்பீடு ஒன்றினைப் பெற்றுக் கொள்வதற்கான சேவை பெறுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

### 4.2 குறைவாகப் பயன்படுத்தப்பட்ட நிதி

(அ) பந்தியில் குறிப்பிடப்பட்ட ஆறு ஆய்வாளர்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட நிதியாகிய ரூபா 1,128,750.00 இல் 18.09.2012 வரை ரூபா 623,699.30 ஆய்வுத் திட்டத்திற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிட்ட ஆறு ஆய்வுகளில் நான்கு ஆய்வுகள் நிறைவடைந்துள்ளதுடன் அவற்றுக்கான ஆய்வறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மிகுதி இரண்டு

ஆய்வாளர்களும் அவர்களின் ஆய்வுச் செயற்பாடுகளை மிகுதிப்பணத்தினைப் பயன்படுத்தி தங்களின் ஆய்வுகளை முடிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஆ) நடைமுறைக்கணக்கில் உள்ள மேலதிக நிதி காலத்திற்குக் காலம் குறுகிய கால வைப்பில் இடப்படுகின்றன.

**4.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

மென்பொருள் தொகுதியில் இருந்த குறைபாடும் தவறான வழங்குகையும் இந்த பிரச்சினைக்கு வித்திட்டது. 2012 இல் இந்த குறைபாடுகளை சீர்செய்து கணணிப் பிரிவு புதிய மென்பொருள் ஒன்றினை வழங்கியுள்ளது. களஞ்சியசாலை ஊழியர்கள் பொருட்களை பெற்றுக் கொள்ளும் போது அவை உரியவைதானா என்பதை உறுதிப்படுத்துவதற்கு விழிப்புடன் இருக்குமாறு பணிக்கப்பட்டுள்ளனர்.

**4.4 ஒப்பந்த நிர்வாகக் குறைபாடுகள்**

31 திசெம்பர் 2011 வரை உள்ள ஆறு உடன்படிக்கைகளில் மூன்று உடன்படிக்கைகள் அதன் ஒப்பந்த தொகையினை விட ரூபா 2,639,556.00 ஆல் அதிகரித்துள்ளன. மேலும் தாமதமாகிய ஒவ்வொரு ஒப்பந்தங்களில் இருந்தும் குற்றப்பணமாக ரூபா 12,931,956.00 அவர்களின் இறுதி கொடுப்பனவுப் பட்டியலில் இருந்து கழிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இரண்டு மாதங்கள் பதினைந்து நாட்களால் தாமதமாகிய மற்றுமொரு ஒப்பந்தத்துக்குரிய இறுதிக் கொடுப்பனவுப் பட்டியல் வந்ததும் அதற்குரிய குற்றப்பணம் கழிப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**4.4.2 வெளிவழங்கல்கள்**

(அ) குறிப்பிடப்பட்ட ஒப்பந்தகாரர்களால் உரிய உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், பாதுகாப்பு வைப்புப்பணமும் மாதாந்த வாடகை நிலுவையும் அவர்களால் பல்கலைக்கழகத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது.

(ஆ) பாதுகாப்பு வைப்பு பணம் செலுத்தாத ஒப்பந்ததாரர்கள் 2011.04.01 திகதிய கடிதம் மூலம் 08.04.2011 இல் ஒப்பந்த பணம் செலுத்தி ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுமாறு கேட்கப்பட்டதன் மூலம் அனைத்து ஒப்பந்ததாரர்களும் மேற்படி உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளனர்.

(இ) குறித்த காலத்தில் மாதாந்த வாடகைக்கட்டணம் செலுத்தாத ஒப்பந்தகாரர்களுக்கு மேற்படி நிலுவைகள் உரிய குற்றப்பணத்துடன் அவர்களின் பாதுகாப்பு வைப்பிலிருந்து கேள்விக்கால முடிவில் அறவிடப்படும் என நினைவூட்டல் கடிதமூலம் அறியத்தரப்பட்டுள்ளது.

### 4.5 நூலக நிர்வாகம்

(அ) இதுவரை 95 வீதமான நூலகப் புத்தக விபரங்களை கணணிமயப்படுத்தும் செயற்பாடு நிறைவுற்றுள்ளது. புத்தகக் கணக்கெடுப்பு செயற்பாடு 2012 செப்ரெம்பர் இரண்டாவது வாரத்திலிருந்து ஆரம்பமாகியுள்ளது.

(ஆ) குறித்த புத்தகங்களின் பெறுமதியை குறித்த விரிவுரையாளர்களின் ஜூலை 2012 சம்பளத்திலிருந்து கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(இ) தற்போது பொருத்தப்பட்டுள்ள மூடிய சுற்று தொலைக்காட்சிக் (CCTV) கமராத் தொகுதி உரிய முறையில் செயற்படாமை விசாரணை ஒன்றின் போது அவதானிக்கபட்டமையாலும், இதனை திருத்தம் செய்வதோ அல்லது இலங்கையில் உள்ள தொழில்நுட்ப வழங்குனர்களால் புதிய கருவிகளைப் பொருத்தி இயங்க வைப்பதோ முடியாது என்பதால் இதனை அகற்றி விட்டு புதிய மூடிய சுற்று தொலைக்காட்சிக் கமராத் தொகுதியினை பொருத்துவது என 05.09.2012 இல் நடைபெற்ற தொழில்நுட்ப ஆய்வுக் குழு தீர்மானித்துள்ளது.

(ஈ) குறித்த ஒன்பது புத்தகங்களில் ஒன்று ஏற்கனவே மீளளிக்கப்பட்டுள்ளது. இரண்டு புத்தகங்களின் பெறுமதி அவர்களின் சேமலாப நிதியிலிருந்து கழிக்கப்படும். இந்த விடயம் தொடர்பான பல்கலைக்கழக சட்டதிட்டங்களின் படி ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக மீளளிக்கப்படாத மூன்று புத்தகங்களின் பெறுமதி அவர்களின் சம்பளத்திலிருந்து ஆண்டின் இறுதியில் கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் மிகுதி மூன்று புத்தகங்களின் பெறுமதி மூன்று ஆண்டுகளின் இறுதியில் அவர்களின் சம்பளத்திலிருந்து கழிக்கப்படும். குறித்த விடயம் தொடர்பாக நினைவூட்டல் கடிதங்கள் குறித்த விரிவுரையாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

## 5. கணக்கீட்டு நியமங்களும் சிறந்த நிர்வாகமும்

### 5.1 வரவு செலவுக் கட்டுப்பாடு

ஆண்டின் ஆரம்பத்தின் பின்னர் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கொடுப்பனவு குறித்த ஆண்டிற்கான உத்தேச வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. 2001 இல் அங்கீகரிக்கப்பட்ட ஐந்து வீத விசேட கொடுப்பனவு மற்றும் இருபத்தைந்து வீத கல்விக் கொடுப்பனவு ஆகியவை இதற்குரிய உதாரணங்களாகும். இது கட்டாய சேவைக்குரிய செலவாகையால் அனுமதிக்கப்பட்ட எல்லையை விட செலவு அதிகரிப்பது தவிர்க்க முடியாதது ஆகும்.

குறிப்பிடப்பட்ட செலவீனம் மீண்டு வரும் நோக்கில் மூலதனச் செலவீனம் என்பதோடு அதற்குரிய ஏற்பாடுகளும் பராமரிப்புச் செலவீனத்திற்கான ஏற்பாடுகளும் மூலதனச் செலவீனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. சுயநிதிக் கொடுப்பனவுக் கற்கைநெறிகள் குறித்த திகதியில் தொடங்கப்படாமையாலும், குறித்த நிதியாண்டில் திட்டமிடப்பட்ட சில கற்கைநெறிகள் தொடங்கப்படாமையாலும் எதிர்பார்க்கப்பட்ட செலவீனத்தில் குறைவு அவதானிக்கப்பட்டுள்ளது.

சிறந்த வரவுசெலவுக் கட்டுப்பாட்டினை பேணுமாறு அலுவலர்கள் பணிக்கப்பட்டுள்ளனர்.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

முறைமைகளும் கட்டுப்பாடுகளிலும் வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு உரிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பேராசிரியர் சரத் அமுனுகம

துணைவேந்தர்